# நாளை இரவு 11 மணி வரை மெட்ரோ ரயில் சேவை நீட்டிப்பு

சென்னை, அக். 28-
சென்னை மெட்ரோ ரயில் சேவைகள் நாளை இரவு 11 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக மெட்ரோ ரயில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இது குறித்து சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் வெளியிட்ட அறிக்கை: சென்னை மெட்ரோ ரயில் சேவை வழக்கமாக காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை இயக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் நவராத்திரி தொடர் விடுமுறை காரணமாக நாளை (வியாழக்கிழமை) மட்டும் மெட்ரோ ரயில் சேவை இரவு 11 மணி வரை நீட்டிக்கப்படுகிறது.

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.